அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 144/2017
தேதி : 24.11.2017

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை.**

எகிப்து நாட்டில் ஒரு மசூதியில் வெடிகுண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூடு தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தில் 200-கும் மேற்பட்டோர் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது.

தீவிரவாதக் கொடுமைகள் எங்கு நடந்தாலும், அவை வன்மையாக கண்டிக்கப்படவேண்டியவை மட்டுமல்ல, தண்டிக்கப்படவேண்டியவையும் தான்.

தீவிரவாதத்திற்கும், பயங்கரவாதத்திற்கும் எதிரான ஓர் உலகப்போரில் அனைத்து உலக நாடுகளும் ஒன்றிணைந்து போராடவேண்டும். தீவிரவாதமும், தீவிரவாதிகளும் வேரோடு களையெடுக்கப்படவேண்டும்.

எகிப்து மண்ணில் மசூதியில் நடந்த இந்த கொடுமையான தாக்குதல் சம்பவங்களில் உயிரிழந்தவர்களுக்கு என் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com